# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,938/2 - 1970 දෙසැම්බර් 27 වැනි ඉරිද — 1970.12.27

14,938/2 ம் இலக்கம் 1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

#### உரிமைக் கோரிக்கை அறிவித்தல்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் இதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவராகிய இலவனு பண்டார் மதுருவே ஆகிய நான், 1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தினது 34 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப் பிரிவின் ஏற்பாட்டின் கீழ் சொல்லப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தரமும் விவரணமும் உடைய சொத்தாகையினால், இவ்வகைக்கு இப்பட்டோலையில் விவரிக்கப்பட்டிருக்கும் இச்சொத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு வேண்டியதென வெளிப்படுத்துகின்றேன்.

இலவனு பண்டார் மதுருவே,
பொது முகாமையாளர்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு,
1970 ம் ஆம் டிசம்பர் மீ 22 ந் உ.

பட்டோலை

1. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொலன்னுவா நகர சங்க எல்லைக்குள் அம்பதலென்பகலவில் எகொட கொலன்னுவா என்ற இடத்தில் உள்ளதும், கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானதும், எஸ்ஸோ ஸ்ராண்டேட் ஈஸ்ரேண் (இணைக்கப்பட்டது)க்குக் குத்தகைக்கு விடப்பட்டதுமான கொலன்னுவா எண்ணெய் நிறுவனசாலை வளவின் அபாயமற்ற பிரிவின் ஒரு பாகமாயுள்ளதும், வடக்கிலும் கிழக்கிலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இடங்கொள்ளப்பட்டுள்ள காணியினாலும் தெற்கில் வீதி ஒதுக்கீட்டினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) மேற்கில் பிரிட்டிஸ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் எல்லையிடப்பட்டுள்ளதும் ஏறக்குறைய ஒரு ஏக்கர் ஒரு றூட் பதினெட்டுப் பேர்ச் (ஏ. 1, றூ. 1, பே. 18) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித்துண்டமாகும்.

(கொலன்னுவா—எஸ்ஸோ)

2. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொலன்னுவா நகர சங்க எல்லைக்குள் அம்பதலென்பகலவில் எகொட கொலன்னுவா என்ற இடத்தில் உள்ளதும், கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானதும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது)க்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுமான கொலன்னுவா எண்ணெய் நிறுவனசாலை வளவின் அபாயமற்ற பிரிவின் ஒரு பாகமாயுள்ளதும், வடக்கில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் வீதி ஒதுக்கீட்டினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) கிழக்கில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டதும் தற்பொழுது இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) ஆல் இடங்கொள்ளப்பட்டுள்ளதுமான காணியினாலும் தெற்கிலும் மேற்கிலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணியினாலும் எல்லையிடப்பட்டுள்ளதும், ஏறக்குறைய வெறுமை ஏக்கர் இரண்டு றூட் இருபது பேர்ச் (ஏ. 0, றூ. 2, பே. 20) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித்துண்டமாகும்.

(கொலன்னுவா—ஷெல்)

3. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகரசங்க எல்லைக்குள் புளூமெண்டலில் உள்ளதும், புளூமெண்டலில் கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானதும் பிரிட்டிஸ் பெற்றோலிய கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்டதுமான அளவு தாங்கிகள் நிறுவனத்தின் ஒரு பகுதியாய் உள்ளதும், வடக்கில் தனிப்பட்ட கட்சியினரினால் உரிமை கோரப்படும் காணிகளினாலும் கிழக்கில் தனிப்பட்டோரின் காணியினாலும் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) தெற்கில் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) எஸ்ஸோ ஸ்ராண்டட் ஈஸ்ரேண் (இணைக்கப்பட்டுள்ளது) க்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணியினாலும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது)க்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணியினாலும் மேற்கில் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது)க்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் முடிக்குரிய காணி (கொழும்பு துறைமுக அதிகாரசபை) யினாலும் எல்லையிடப்பட்டுள்ளதும் ஏறக்குறைய இரண்டு ஏக்கர் வெறுமை றூட் எட்டு தசம் நான்கு நாக்கு பேர்ச் (ஏ. 2, றூ. 0, பே. 8·44) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித்துண்டமாகும்.

(புளூமெண்டல்—ஷெல்)

4. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சங்க எல்லைக்குள் புளூமெண்டலில் உள்ளதும், புளூமெண்டலில் கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானதும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது)க்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுமான அளவு தாங்கிகள் நிறுவனத்தின் ஒரு பகுதியாய் உள்ளதும், வடக்கில் தனிப்பட்ட கட்சியினரினால் உரிமை கோரப்படும் காணிகளினாலும் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகாரசபை) பிரிட்டிஸ் பெற்றோலிக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் கிழக்கில் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகாரசபை) பிரிட்டிஸ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் தெற்கில் வீதி ஒதுக்கீட்டினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) மேற்கில் தனிபபட்ட கட்சியினரினால் உரிமை கோரப்படும் காணிகள், வால்ஸ் ஒழுங்கை ஆகியவற்றினாலும் எல்லையிடப்பட்டுள்ளதும், ஏறக்குறைய மூன்று ஏக்கர் வெறுமை றூட் நான்கு தசம் ஆறு ஏழு பேர்ச் (3ஏ. றூ. 0, பேர். 4·67) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித் துண்டமாகும்,

(புளூமெண்டல்—ஷெல்)

5. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சங்க எல்லைக்குள் புளூமெண்டலில் உள்ளதும், புளூமெண்டலில் கொழும்பு துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமானதும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுமான அளவு தாங்கிகள் நிறுவனத்தின் ஒரு பகுதியாயுள்ளதும், வடக்கில் பிரிட்டிஷ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் கிழக்கில் பிரிட்டிஷ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) தெற்கில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) மேற்கில் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது)க்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் வீதி ஒதுக்கீட்டினாலும் (கொழும்பு துறைமுக அதிகாரசபை) எல்லையிடப்பட்டுள்ளதும் ஏறக்குறைய ஒரு ஏக்கர் வெறுமை றூட் பன்னிரண்டு தசம் நான்கு இரண்டு பேர்ச் (1 ஏ. 0 றூ. 12·42 பேர்ச்) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித்துண்டங்களும்.

(புளூமெண்டல்—எஸ்ஸோ)

6. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சங்க எல்லைக்குள் முகத்துவார தெற்குத் துறைமுக மேடையில் உள்ளதும், வடக்கிலும் கிழக்கிலும் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகாரசபை) தெற்கில் இலங்கை கல்ரெக்ஸ் (வரையறுத்தது) தினால் இடங்கொள்ளப்பட்டிருக்கும் கட்டடத்தினாலும் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகாரசபை) மேற்கில் முடிக்குரிய காணியினாலும் (கொழும்பு துறைமுக அதிகாரசபை) எல்லையிடப்பட்டுள்ளதும், ஏறக்குறைய வெறுமை ஏக்கர் வெறுமை றூட் ஒன்று தசம் ஒன்று நான்கு பேர்ச் (0 ஏ. 0 றூ. 1·14 பேர்ச்) பரப்புடையதும், கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானதும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) இனால் இடங்கொள்ளப்பட்டிருக்கும் மேல்மாடிக் கட்டடத்தைக் கொண்டுள்ளதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித்துண்டங்களும்.

(தெற்குதுறைமுகமேடை—ஷெல்)

7. இப்பட்டோலையின் விடயம் ஒன்றில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தில் உள்ள ஊர்திச்சாலையில் நிற்பாட்டிவைக்கப்பட்டிருப்பதும் டிராக்டருக்கும் (மெக் பி–42) டிரெயிலருக்கும் (கொள்திறன் 2400 இ. க.) முறையே சிவி–6740 ரி. ஆர்.–1351 ஆகிய பதிவெண்களைக் கொண்டுள்ளனவும் ஆகிய தொடுத்த விமான மீள் எரிபொருளூட்டி தவிர்த்து, இப்பட்டோலையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் விடயங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் ஒவ்வொன்றிலும் காணக்கிடக்கும் அல்லது அதில் கொண்டிருக்கும் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமாகிய சொத்து யாவும்.

8. இப்பட்டோலையின் விடயங்கள் 1, 2, 3, 4, 5, 6 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துக்களில் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதியன்றிருந்தபடி ஒழுங்கு (ஒப்பாசாரமுள்ள அல்லது ஒப்பாசாரமற்ற) உடன்பாடு குத்தகை முறி நொத்தாரிசாற் கைச்சாத்திடப்பட்ட சாதனம் போன்ற எவற்றினுவது நியதிகளின் கீழ் அடையப் பெற்ற தனித்தனியானதும் அடங்கலானதுமான சகல உரிமைகள் அக்கறைகள் நயங்கள் யாவும்.

(கொலன்னுவா, புளூமெண்டல், தெற்குதுறைமுகமேடை—ஷெல் & எஸ்ஸோ)

9. புளூமெண்டலில் உள்ள பொது வசதி எண்ணெய்க்குழாய் இணைப்பில் உள்ள வால்வ் பெட்டியில் இருந்து இப்பட்டோலையில் விடயம் 5 இல் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தின் கிழக்கு வெளிப்புற எல்லை வரை முற்றுகவுள்ள எல்லா குழாய் இணைப்புக்கள் அதில் கொண்டிருக்கும் பெற்றோலியப் பொருட்கள் வால்வுகள் வால் பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகிய யாவும்.

10. இப்பட்டோலையில் விடயம் 5 இல் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தின் தெற்கு வெளிப்புற எல்லையிலிருந்து கொழும்பு துறைமுக தெற்குத் துறைமுக மேடைவரை முற்றுகவுள்ள எல்லா குழாய் இணைப்புக்கள் அதில் கொண்டிருக்கும் பெற்றோலியப் பொருட்கள் வால்வுகள் வால் பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகிய யாவும்.

11. இப்பட்டோலையின் 10 ஆவது விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புக்களில் பாவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது பாவிப்பதற்கு எண்ணியிருக்கும் வளையும் தன்மை நிறைந்த குழாய்கள் யாவும்.

(எஸ்ஸோ—குழாய் இணைப்புக்கள்)

12. புளூமெண்டலில் உள்ள பொது வசதி எண்ணெய்க் குழாய் இணைப்பில் உள்ள வால்வ் பெட்டியில் இருந்து இப்பட்டோலையில் விடயம் 3 இல் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தின் கிழக்கு வெளிப்புற எல்லை வரை முற்றுகவுள்ள எல்லா குழாய் இணைப்புக்கள் அதில் கொண்டிருக்கும் பெற்றோலியப் பொருட்கள் வால்வுகள் வால் பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகிய யாவும்.

13. இப்பட்டோலையின் 3 ஆவது விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தின் கிழக்கு வெளிப்புற எல்லையிலிருந்து கொழும்பு துறைமுக தெற்குத் துறை மேடைவரை பின்வருவனவை தவிர்ந்த முற்றுகவுள்ள எல்லா குழாய் இணைப்புக்கள் அதில் கொண்டிருக்கும் பெற்றோலியப் பொருட்கள் வால்வுகள் வால் பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகியவை யாவும்.

(1) தற்போதுள்ள இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) இனுல் வாயு எண்ணெய் செலுத்துவதற்கென உபயோகப்படுத்தப்பட்டு வரும் குழாய் இணைப்பு அதில் கொண்டிருக்கும் பொருட்கள் வால்வுகள் வால்பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகியவை முற்றுக,

(2) தற்பொழுது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுல் வாயு எண்ணெய் செலுத்துவதற்கென உபயோகப்படுத்தப்பட்டுவரும் குழாய் இணைப்பு அதில் கொண்டிருக்கும் பொருட்கள் வால்வுகள் வால் பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகியவை முற்றுக.

14. இப்பட்டோலையின் 12 ஆவது விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புக்களில் உபயோகப்படுத்தப்பட்டுவரும் அல்லது உபயோகிப்பதற்கு எண்ணியிருக்கும் வளையும் தன்மை நிறைந்த குழாய்கள் யாவும்.

(ஷெல்—குழாய் இணைப்புக்கள்)

15. இப்பட்டோலையில் 10 ஆம், 13 ஆம் விடயங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் குழாய் இணைப்புக்களில் இருந்தும் கொழும்பு துறைமேடையில் உள்ளதும் இப்பட்டோலையில் 13 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுமான இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) இனுல் தற்பொழுது வாயு எண்ணெய் செலுத்துவதற்கு உபயோகப்படுத்தப்பட்டு வரும் குழாய் இணைப்பில் இருந்தும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுல் தற்பொழுது வாயு எண்ணெய் செலுத்துவதற்கு உபயோகப்படுத்தப்பட்டுவரும் குழாய் இணைப்பில் இருந்தும் ஆரம்பமாகி,

(1) கொழும்புத் துறைமுகத்தில் உள்ள தெற்குத் துறைமேடையும் வழிகாட்டுத் துறைமுகப்பாலமும்,

(2) பிறின்ஸ் விஜயா துறைமுக மேடையை நோக்கிச் செல்லும் குழாய் இணைப்பு முடிவடையும் வால் பிரிஸ்வரையிலான முற்றுகவுள்ள குழாய் இணைப்புக்கள் அவற்றில் கொண்டிருக்கும் பெற்றோலியப் பொருட்கள் வால்வுகள் கால் பிர்ஸ் பெண்ட்ஸ் ஆகியவை யாவும்.

(பொது குழாய் இணைப்புக்கள்)

16. இப்பட்டோலையில் விடயங்கள் 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துக்களில் டிசம்பர் மாதம் 22 ஆம் தேதியன்றிருந்தபடி ஒழுங்கு (ஒப்பாசாரமுள்ள அல்லது ஒப்பாசார மற்ற) உடன்பாடு குத்தகைமுறி நொத்தாரிசாற் கைச்சாத்திடப்பட்ட சாதனம் போன்ற எவற்றினுவது நியதிகளின் கீழ் அடையப் பெற்ற தனித்தனியானதும் அடங்கலானதுமான சகல உரிமைகள் அக்கறைகள் நயங்கள் ஆகியவற்றுடன் சொல்லப்பட்ட சொத்துக்களில் தொடர்புடையதாகவேனும் இடைநேர்ந்தேனும் உண்டாகிய உரிமை யாவும்.

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### உரிமைக் கோரிக்கை அறிவித்தல்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் இதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவராகிய இலவணு பண்டார் மதுருவே ஆகிய நான், 1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினது 34 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப் பிரிவின் ஏற்பாட்டின் கீழ் சொல்லப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தரமும் விவரணமும் உடைய சொத்தாகையினால், இவ்வகைக்கு இப்பட்டோலையில் விவரிக்கப்பட்டிருக்கும் இச்சொத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு வேண்டியதென வெளிப்படுத்துகின்றேன்.

இலவணு பண்டார் மதுருவே,
பொது முகாமையாளர்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு டிசம்பர் மீ 22 ந வ.

#### பட்டோலை

1. கொழும்பு துறைமுகத்தில் இருப்பதும் கரியேற்று தேவைகட்கு உபயோகப்படுத்தப்படுவதும் லொயிட்ஸ் பதிவு எண். 5252567 அலுவலக எண். எல். 126 (அழைக்கும் குறி ஜீ. பி. எச். ஜே.) ஆகியவற்றை உடையதும் " நில்வலா " என்று பெயரிடப்பட்டுள்ளதுமான கலமும் அக்கலத்திலும் கரையோரத்திலும் இருக்கும் எல்லாச் சாதனங்கள் மாற்றுறுப்புக்கள் துணைக்கருவிகள் ஆகியவை யாவும்.

2. கொழும்பு துறைமுகத்தில் இருப்பதும் கரியேற்று தேவைகட்கு உபயோகப்படுத்தப்படுவதும் லொயிட்ஸ் பதிவு எண். 5394987 அலுவலக எண். எல். 31 ஆகியவற்றையுடையதும் " யன் ஓயா " என்று பெயரிடப்பட்டுள்ளதுமான கலமும் அக்கலத்திலும் கரையோரத்திலும் இருக்கும் எல்லாச் சாதனங்கள் மாற்றுறுப்புக்கள் துணைக்கருவிகள் ஆகியவை யாவும்.

3. கொழும்பு துறைமுகத்தில் இருப்பதும் கரியேற்று தேவைகட்கு உபயோகப்படுத்தப்படுவதும் அலுவலக எண். எல். 29 உடையதும் " கலு ஓயா " என்று பெயரிடப்பட்டுள்ளதுமான கலமும் அக்கலத்திலும் கரையோரத்திலும் இருக்கும் எல்லாச் சாதனங்கள் மாற்றுறுப்புக்கள் துணைக் கருவிகள் ஆகியவற்றுடன் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்டு சொல்லப்பட்ட கலத்தைப் பழுது பார்த்துக் கொள்ளும் நோக்குடன் கரையோரத்தில் கிடக்கும் எல்லாச் சாதனங்கள் மாற்றுறுப்புக்கள் துணைக்கருவிகள் ஆகியவைகள் யாவும்.

(ஷெல்—படகுகள்)

4. கொழும்புத் துறைமுகத்தில் இருப்பதும் கரியேற்று தேவைகட்கு உபயோகப்படுத்தப்படுவதும் உத்தரவுச் சீட்டுச் சான்றிதழ் எண். ஏ. 79276, வள்ளம் எண். எல். 104 காப்புறுதிப்பத்திரம் எண். எச்./30/70 ஆகியவற்றையுடையதும் " எஸ்ஸோ " 841 என்று பெயரிடப்பட்டுள்ளதுமான கலமும் அக்கலத்திலும் கரையோரத்திலும் இருக்கும் சாதனங்கள் மாற்றுறுப்புக்கள் துணைக்கருவிகள் ஆகியவைகள் யாவும்.

(எஸ்ஸோ—லோஞ்சு)

12-1202/2

---

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### உரிமைக் கோரிக்கை அறிவித்தல்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் இதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவராகிய இலவணு பண்டார் மதுருவே ஆகிய நான், 1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினது 34 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப் பிரிவின் ஏற்பாட்டின் கீழ் சொல்லப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தரமும் விவரணமும் உடைய சொத்தாகையினால் இவ்வகைக்கு இப்பட்டோலையில் விவரிக்கப்பட்டிருக்கும் இச்சொத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு வேண்டியதென வெளிப்படுத்துகின்றேன்.

இலவணு பண்டார் மதுருவே,
பொது முகாமையாளர்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு,
டிசம்பர் 22, 1970.

#### பட்டோலை

1. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவை நகர சங்க எல்லைக்குள் அம்பதலென்பகலவில் எகொட கொலன்னாவ என்ற இடத்தில் உள்ளதும், கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானதும் பிரிட்டிஸ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுமான கொலன்னாவா எண்ணெய் நிறுவன வளவின் அபாயமற்ற பிரிவின் ஒரு பகுதியாயுள்ளதும், வடக்கில் பிரிட்டிஸ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் கிழக்கில் எஸ்ஸோ ஸ்ராண்டேட் ஈஸ்ரேண் (இணைக்கப்பட்டது) க்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் தெற்கில் வீதி ஒதுக்கீட்டினாலும் (கொழும்பு துறைமுக அதிகார சபை) மேற்கில் பிரிட்டிஸ் பெற்றோலியக் கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணியினாலும் எல்லையிடப்பட்டுள்ளதும், ஏறக்குறைய ஒரு ஏக்கர் ஒரு றூட் நான்கு பேர்ச் (1 ஏ. 1 றூ. 4 பேர்ச்) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித்துண்டடங்கலும்.

2. இப் பட்டோலையின் 1 ஆம் விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தில் காணக்கிடக்கும் அல்லது அதில் கொண்டிருக்கும் எல்லா கடல் உராய்வு நீக்கிகளும் கொழுப்புகளும் மற்றும் கடற்கலத்திற்கு வேண்டிய மாற்றுறுப்புக்கள் சாதனங்கள் துணைக் கருவிகள் ஆகியவைகள் யாவும்.

(கரியேற்றுவசதிகள்—ஷெல்)

12-1202/3

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### உரிமைக் கோரிக்கை அறிவித்தல்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் இதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவராகிய இலவனு பண்டார் மதுருவே ஆகிய நான், 1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினது 34 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப் பிரிவின் ஏற்பாட்டின் கீழ், சொல்லப்பட்ட பிரிவில் குறிப்பிட்டுள்ள தரமும் விவரணமும் உடைய சொத்தாகையினால், இவ்வகைக்கு இப்பட்டோலையில் விவரிக்கப்பட்டிருக்கும் இச் சொத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு வேண்டியதென வெளிப்படுத்துகிறேன்.

இலவனு பண்டார் மதுருவே,
பொது முகாமையாளர்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு, டிசம்பர் 22, 1970.

### பட்டோலை

கொலன்னாவ எண்ணெய் நிறுவனசாலை வளவின் அபாயமற்ற பிரிவில் உள்ளதும் இலங்கை ஷெல் கம்பனிக்குச் சொந்தமானதுமான கங்கத்தீர்ப்புக் கிட்டங்கியினுள் இருக்கும் அல்லது அதில் காணக்கிடக்கும் எல்லா கடல் உராய்வு நீக்கிகள் கொழுப்புகள் யாவும்.

(கடல் உராய்வுநீக்கிகள்—ஷெல்)

12–1202/4

---

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### உரிமைக் கோரிக்கை அறிவித்தல்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் இதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவராகிய இலவனு பண்டார் மதுருவே ஆகிய நான், 1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினது 34 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப் பிரிவின் ஏற்பாட்டின் கீழ் சொல்லப்பட்ட பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தரமும் விவரணமும் உடைய சொத்தாகையினால் இவ்வகைக்கு இப்பட்டோலையில் விவரிக்கப்பட்டிருக்கும் இச்சொத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு வேண்டியதென வெளிப்படுத்துகின்றேன்.

இலவனு பண்டார் மதுருவே,
பொது முகாமையாளர்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு,
1970 ம் ஆல் டிசம்பர் மீ 22 ந உ.

### பட்டோலை

1. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சைனுபே எண்ணெய் நிறுவனங்களில் உள்ள 2 ஆம், 7 ஆம், 9 ஆம், 10 ஆம் இலக்க தாங்கிகளில் கொண்டிருக்கும் அல்லது காணக்கிடக்கும் பெற்றோலியப் பொருட்கள்.

2. திருகோணமலைத் துறைமுகத்தில் உள்ள முதலாம் இலக்க எண்ணெய் துறைமுக மேடையில் இருந்து இவ்விடயத்தில் முதலாம் விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் தாங்கிகள் ஒவ்வொன்றிற்கும் செல்லும் குழாய இணைப்புக்களில் கொண்டிருக்கும் அல்லது காணக்கிடக்கும் பெற்றோலியப் பொருட்கள்.

(சைனுபே—பெற்றோலியப் பொருட்கள்)

12–1202/5

---

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### உரிமைக் கோரிக்கை அறிவித்தல்

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் அவர்களினால் இதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் ஒருவராகிய இலவனு பண்டார் மதுருவே ஆகிய நான், 1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தினது 34 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப் பிரிவின் ஏற்பாட்டின் கீழ் சொல்லப்பட்ட பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தரமும் விவரணமும் உடைய சொத்தாகையினால், இவ்வகைக்கு இப்பட்டோலையில் விவரிக்கப்பட்டிருக்கும் இச்சொத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேவைக்கு வேண்டியதென வெளிப்படுத்துகிறேன்.

இலவனு பண்டார் மதுருவே,
பொது முகாமையாளர்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு,
1970 ம் ஆல் டிசம்பர் மீ 22 ந உ.

### பட்டோலை

1. மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ நகர சங்க எல்லைக்குள் அம்பதலலென் பகலவில் எகொட கொலன்னாவ என்ற இடத்தில் உள்ளதும், கொழும்பு துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கொலன்னாவ எண்ணெய் நிறுவனச் சாலை வளவில் அபாயமற்ற பிரிவின் ஒரு பாகமாயுள்ளதும் மெழுகுதிரித் தொழிற்சாலை ஒன்றையும் நீர் குளிரூட்டும் கோபுரம் ஒன்றையும் கொண்டுள்ளதும், வடக்கில் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குக் குத்தகைக்கு விடப்பட்ட எண்ணெய் நிறுவனசாலை வளவின் ஒரு பாகத்தினாலும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்ட சொல்லப்பட்ட வளவின் ஒரு பாகத்தினாலும் கிழக்கில் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குக் குத்தகைக்கு விடப்பட்டதும் தற்பொழுது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இடங்கொள்ளப்பட்டுள்ளதுமான வளவின் ஒரு பாகத்தினாலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்ட வளவின் ஒரு பாகத்தினாலும் தெற்கில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட வளவின் ஒரு பாகத்தினாலும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குரிய அலுவலகக் கட்டடத்தினாலும், இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குக் குத்தகைக்கு விடப்பட்ட வளவின் ஒரு பாகத்தினாலும் ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குச் சொந்தமான ஊர்திச்சாலைக் கட்டடத்தினாலும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குக் குத்தகைக்கு விடப்பட்ட சொல்லப்பட்ட வளவின் ஒரு பாகத்தினாலும், மேற்கில் புகை வண்டித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டினாலும் இலங்கை ஷெல் கம்பனி (வரையறுத்தது) க்குக் குத்தகைக்கு விடப்பட்ட வளவினாலும் எல்லையிடப்பட்டுள்ளதும் வெறுமை ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்று பேர்ச். (ஏ. 0, றூ. 2, பே. 13) பரப்புடையதுமான பிரித்தொதுக்கப்பட்ட முடிக்குரிய காணித் துண்டடங்கலும்.

2. இப்பட்டோலையில் 1 ஆவது விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தில் காணக்கிடக்கும் அல்லது அதில் கொண்டிருக்கும் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமாகிய சொத்துக்கள் யாவும்.

3. இப்பட்டோலையில் 1 ஆவது விடயத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தில் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆந் தேதியன்றிருந்தபடி ஒழுங்கு (ஒப்பாசாரமுள்ள அல்லது ஒப்பாசாரமற்ற) உடன்பாடு குத்தகைமுறி நொத்தாரிசாற் கைச்சாத்திடப்பட்ட சாதனம் போன்ற எவற்றினுவது நியதிகளின் கீழ் அடையப் பெற்ற தனித்தனியானதும் அடங்கலானதுமான சகல உரிமைகள், அக்கறைகள் நயங்கள் யாவும்.

12–1202/6

---

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற பதிப்பிக்கப்பெற்றது.